JUDICIAL FORM NO.53
{See Rule-42}
DEPOSITION OF WITNESS
(CHATPTER XXIII CRPC).
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.
Case No.CC.115/2021
PW.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமசாமி | தாலுகா | கடையநல்லூர் |
| தந்தை பெயர் | பரமசிவன் | தொழில் | தலைமை காவலர் |
| கிராமம் | வலசை | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 04.06.2026

(எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது தென்காசி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சொக்கம்பட்டி காவல்நிலையத்தில் தனிப்பிரிவு அலுவலக தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 13.02.2019 ம் தேதி நான் கடையநல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்த போது அன்றைய தினம் 11.45 மணியளவில் நான் நிலைய பொறுப்பில் இருந்த போது கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலை பெற்று உத்தரவுப்படி கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த பரமசிவன் மனைவி பார்வதி என்பவரிடம் 12 முதல் 12.45 வரை புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் 13.00 மணிக்கு வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 48/2018 இதசபிரிவுகள் 294(b), 323, 506(1) and 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவலறிக்கை அசலையும் புகார் வாக்குமூலத்தின் அசலையும் இணைத்து கணம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை உயர் அதிகாரி களுக்கு அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை விசாரணை அதிகாரியின் பார்வைக்கு வைத்தேன். மேற்படி **முதல் தகவலறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் நீதிமன்றத்தில் சொன்னது போன்று தான்

காவல்உதவி ஆய்வாளர் விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் காவல்உதவி ஆய்வாளர் சொன்னதன் பிறகு தான் அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் சரிதான். என்னிடம் எப்போதும் இருசக்கர வாகனம் உண்டு. இருசக்கர வாகனத்தில் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு 5 நிமிடங்களுக்குள்ளாக சென்று விடலாம் என்றால் சரிதான். காயம்பட்ட நபர் பேசக்கூடிய மனநிலையில்தான் இருந்தார் என்றால் சரிதான். அவர் சொன்ன வாக்குமூலத்தை எழுதிய பின்னர் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அசா.1ன் பற்கள் உடைபட்டதாக குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். காவல்நிலையம் வந்து உதவி ஆய்வாளர் சொன்னதற்கிணங்க தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், பின்னிட்டு காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்துவிட்டு அதற்கேற்ப பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi